**ஆகஸ்ட் – 25**

**"அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால் அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். " - 1யோவா 3 : 2.**

நாம் சீக்கிரத்தில் உயிர்த்தெழுந்த மாறுதலின் அனுபவத்தை அடைவோம் என்றும், நம்முடைய இரட்சகருக்கு ஒப்பாக ஆக்கப்பட்டு அவர் இருக்கிறவண்ணமாகவே அவரை தரிசித்து, பெரிய எபிப்பனி அல்லது ராஜ்யத்தின் மகிமையில் தேவனுடைய குமாரர் பிரகாசிப்பதில், அவருடைய மகிமையில் பங்கடைவோம் என்பதுமாகிய நம்பிக்கை நம்மை ஆர்வமுள்ளவர்களாக்குவதாக. நம்முடைய போதகருக்கும், விசுவாச வீட்டாருக்கும் ஊழியம் செய்ய இது நம் இருதயங்களுக்கு சக்தியைக் கொடுப்பதாக, நமது நாவின் கட்டை அவிழ்ப்பதாக, ஒவ்வொரு கடமைக்காகவும், சலுகைக்காகவும், சந்தர்ப்பத்திற்காகவும், நம்மைபலப்படுத்துவதாக. இந்த நம்பிக்கை கர்த்தருடைய ஜனங்களுக்கு அநேக நூற்றாண்டுகளாக ஒரு நங்கூரமாக இருக்கிறதென்றால், அவர் வந்திருக்கும் இந்த நேரத்தில் வசித்துக் கொண்டு, ராஜ்யத்தின் மகிமையிலே அவர் வெளிப்படும் சமயமாகி "அபாகலிப்ஸிஸ் " காகக் காத்துக் கொண்டிருக்கிற நமக்கு அது இதைவிட எவ்வளவு அதிகமான அர்த்தமுடையதாக இருக்கிறது. **- Z ’03, 151(R 3191)**

கிறிஸ்து வெளிப்படுதல் என்பது அவர் தன்னை உலகத்தாருக்கு வெளிப்படுத்துவதைக் குறிக்கிறது. உபத்திரவ காலத்தின் பெருந்துன்பங்கள் மூலமாக இது நடக்கும். ஆகையால், உபத்திரவம் முற்றிலுமாக முடிவதற்கு முன்னதாகவே முழுசபையையும் தனது கர்த்தரோடு மகிமைப்பட்டிருக்கும் என்ற அந்த உறுதி நமக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. அவர் தோன்றுவதும் மாம்சத்திலிருக்காததுபோல, அவரோடு நாம் தோன்றுவதும் மாம்சத்திலிருக்காது. அழிவுள்ள நிலையிலிருந்து அழியா நிலைக்கும், சாவுக்கேதுவான நிலையிலிருந்து சாவாமைக்கும், மனுஷீகத்திலிருந்து தெய்வீகத்துக்கும் மாற்றப்பட்டு அவரைப்போலிருப்போம். இந்த மகிமையான நிலைமையில் அவரைத் தரிசித்து அவரைப் போலிருப்போம் அவரோடு கூடவுமிருப்போம்! இப்படிப்பட்ட எதிர்காலபலனை நம்முடைய ஆசிக்கும் கண்களுக்கு முன்னாக நிறுத்தி இப்பொழுது இருக்கிற பிரதிகூலமான நிலைமையில் திருப்தியாயிருப்பது நமக்கு நல்லது. **- P ’32, 112.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**சங் 16:11; 17:15; மத் 5:8; 8:11; 1கொரி 13:12; ரோம 8:29; 1கொரி 15:49; பிலி 3:21; கொலோ 3:4; 2பேது 1:4.**

**கோபுர வாசிப்பு : Z ’12, 61 (R 4973)**

**வினாக்கள் : இந்த நம்பிக்கை இந்த வாரத்தில் என்னை எவ்வாறு பாதித்தது ? பலன்கள் எவை?**